**14. தேர்வு முறைகள்:**

இத்தேர்வானது கீழ்காணும் தேர்வு நிலைகளின்படி நடத்தப்படும்.

| வ. எண். | தேர்வு நிலைகள் | மதிப்பெண்கள் | விவரம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்மொழி தகுதித் தேர்வு | 80 | கட்டாயத் தகுதித் தேர்வு ஆகும்.<br>தமிழ்மொழி தகுதித் தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.15. - அ. பகுதி- I ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 2. | முதன்மை எழுத்துத் தேர்வு | 70 | முதன்மை எழுத்துத் தேர்வில் பொது அறிவு மற்றும் உளவியல் தொடர்பான கேள்விகள் கேட்கப்படும்.<br>இத்தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.15 - அ. பகுதி-II ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 3 | **சான்றிதழ் சரிபார்த்தல்** | இல்லை | **சான்றிதழ் சரிபார்த்தலின்** முழுமையான விவரங்கள் வரிசை எண்.15 - ஆ. பகுதி I -ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 4. | உடற்கூறு அளத்தல் | இல்லை | உடற்கூறு அளத்தல் தகுதித் தேர்வேயாகும். உடற்கூறு அளத்தல் தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.15 - ஆ. பகுதி II -ல் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>(முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவத்தினர் / முன்னாள் மத்திய ஆயுத காவல் படையினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு இல்லை). |
| 5. | உடல் உறுதி தேர்வு | இல்லை | உடல் உறுதி தேர்வு தகுதித் தேர்வேயாகும்.<br>உடல் உறுதி தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.15 - ஆ. பகுதி III -ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 6. | உடல்திறன் போட்டிகள் | 24 | உடல்திறன் போட்டிகள் அனைத்திலும் பங்கு பெற வேண்டும். உடற்திறன் போட்டிகளின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.15 - ஆ. பகுதி IV -ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 7. | சிறப்பு மதிப்பெண்கள் | 6 | தேசிய மாணவர் படை சான்றிதழ் (NCC) - 2 மதிப்பெண்கள்<br>நாட்டு நலப்பணித் திட்ட சான்றிதழ் (NSS) - 2 மதிப்பெண்கள்<br>விளையாட்டு சான்றிதழ் (Sports / Games) - 2 மதிப்பெண்கள்<br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் மதிப்பெண் வழங்கும் விவரம் வரிசை எண்.17-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |

## 15. தேர்வு நிலைகள்

### அ. எழுத்துத் தேர்வு

**பகுதி – I. தமிழ் மொழி தகுதித் தேர்வு:**

i. தமிழ் மொழி தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

ii. இத்தேர்வானது கொள்குறி வகை வினாத்தாளாக இருக்கும்.

iii. இத்தேர்வானது, 80 மதிப்பெண்களுக்கான 80 வினாக்களைக் கொண்டது. இத்தேர்விற்கான கால அளவு 80 நிமிடங்கள். (1 மணி 20 நிமிடங்கள்).

iv. தமிழ் மொழித் தகுதித் தேர்வில் (**பிரிவு-I**) குறைந்தபட்சம் 32 மதிப்பெண்கள் (40%) பெற்றால் மட்டுமே, விண்ணப்பதாரர்களுடைய, முதன்மை எழுத்துத் தேர்வின் (**பிரிவு-II**) விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும்

v. தமிழ் மொழித் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் எந்த நிலையிலும் தற்காலிகத் தேர்வுப் பட்டியலைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**பகுதி - II. முதன்மை எழுத்துத் தேர்வு :**

i) **பகுதி-அ** : பொது அறிவு - 45 மதிப்பெண்கள் (கொள்குறி வினா வகை)

**பகுதி-ஆ** : உளவியல் - 25 மதிப்பெண்கள் (கொள்குறி வினா வகை)

ii) பொது அறிவு கேள்விகள் தமிழ்நாடு அரசுப் பாடநூல்களில், பத்தாம் வகுப்பு வரை உள்ள பாடங்களிலிருந்து கேட்கப்படும்.

iii) எழுத்துத் தேர்வுக்கான நேரம் 80 நிமிடங்கள் (1 மணி 20 நிமிடங்கள்).

iv) ஒவ்வொரு வினாவிற்கும் தலா 1 மதிப்பெண் வழங்கப்படும்.

v) விண்ணப்பதாரர்கள் முதன்மை எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் (35%) பெற்றிருக்க வேண்டும்.

vi) எழுத்துத் தேர்வு மாவட்ட / மாநகர தேர்வு மையங்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொள்வதற்கான விருப்பப்பட்ட மாவட்ட / மாநகரத்தை இணையவழி விண்ணப்பத்தில் தேர்வு செய்து கொள்ளலாம்.

vii) விண்ணப்பதாரர்கள் பெற்ற எழுத்துத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, வகுப்பு வாரியாக 1:5 என்ற விகிதாசாரப்படி விண்ணப்பதாரர்கள் அடுத்தகட்ட தேர்வான அசல்